# The badness of western culture

# மேற்கத்திய கலாச்சாரத்தின் தீமைகள்

**அடிக்கடி விளையாட்டுப் போட்டிகள் :**

மிருகத்தனமாக அடித்துக்கொள்ளும் WWF விளையாட்டு குத்துச்சண்டை மற்றும் சிலவகை ஜப்பானிய சண்டைப்போட்டிகள் நிறுத்தப்பட வேண்டும். இவைகள் சிறுவயதிலிருந்தே மனித இனத்திற்கு வெறியூட்டி ஒரு வகை முரட்டு குணத்தை ஏற்படுத்தி மனிதாபிமான எண்ணங்களை மிகக் குறைவாக்குகின்றன. செய்யப்படும் ஒவ்வொரு செயலின் அத்தியாவசியத்தை உணர்ந்து மாற்றங்கள் வரவேண்டும்.

**உலக சினிமாக்களின் கோமாளித்தனங்கள் :**

குறிப்பாக அமெரிக்க ஹாலிவுட் சினிமாக்களில் சில திரைப்படங்கள் போக பெரும்பாலும் மனிதனுக்கு சம்மந்தமில்லாதக் காட்சிகளைக் கொண்டு ஏமாற்று வேலை நடந்துகொண்டிருக்கிறது. பொழுது போக்கிற்குச் சற்று வித்தியாசங்களும், மிகைப்படுத்துதலும் தேவைதான், அதற்காக கண்மூடித்தனமாகக் காட்டுமிராண்டித்தனமான சினிமாக்கள் அவசியமா? ஒரு படம் வித்தியாசத்திற்காக வெற்றி பெற்றுவிட்டால் அதைத் தொடர்ந்து ஆயிரம் சினிமாக்கள் அதே பாணியில் பல மடங்குப் பெருக்கத்துடன் வந்து இந்த சமுதாயத்தை மனக் கொலைகள் செய்து கொண்டிருக்கின்றன.

இந்த வரிசையில் திகிலூட்டும் கற்பனைவடிவப்பேய் படங்கள், மனிதர்களை அனாவசியமாகப் பயமுறுத்தும் மனதை நோயாக்கும் பூச்சிகள், விலங்குகள், இயந்திரங்களின் படங்கள், துப்பாக்கிகளால் சுட்டுக்கொண்டே இருக்கும் படங்கள், ஒருவர் வெறும் கை-கால்களால் ஆயிரம் பேரை அதுவும் பயங்கர ஆயுதங்கள், துப்பாக்கிகள், நவீன போர்க்கருவிகள் வைத்து தாக்குபவர்களை சர்வசாதாரணமாக வெற்றிக்கொள்ளும் கோமாளித்தனப் படங்கள் என மனித வாழ்க்கைக்குச் சற்றும் சம்மந்தமில்லாமல் வந்து கொண்டிருக்கின்றன. தனிமனித மூளையைச் சலவை செய்து மனித இயற்கை இயல்பு நிலைகளிலிருந்து மாற்றி அன்பு, இரக்கம், ஈகை, மனிதநேயம் போன்றவைகள் என்ன என்பதே தெரியாமல் செய்து வருகின்றன.

அதுவும் இவைகளை மிகச்சிறுக் குழந்தை பருவத்திலிருந்தே அனைவருக்கும் பழக்கப்படுத்தி வருவதால் குழந்தைகள் முதல் இளைஞர்கள், இன்றைய பெரியவர்கள் வரை யாருக்கும் உண்மையான அவசியங்கள், நியாயங்கள், இயற்கை இயல்புநிலை, மனிதாபிமானம் என்னவென்று தெரிய வாய்ப்பில்லாமல் இருக்கிறது. அனைவரும் எப்படியாவது அதிகம் சம்பாதிக்க வேண்டும், மிக உல்லாசமாக வாழ வேண்டும், தானே வெற்றி கொள்ள வேண்டும் என்ற வெறியோடு திரிகிறார்கள். இதனால் உலகத்தில் பிரச்சினைகளே எஞ்சி நிற்கும்.

தான், தன் குடும்பம், தன் ஜாதி-மதம், தன்நாடு என்ற வரிசைக்கிரமத்தில் எப்படியாவது நன்றாக இருந்தால் போதும் என்ற கொள்கை வழக்கத்தில் தனி மனிதன் முதல் நாடுகள், அரசுகள் வரை செயல்பட்டு வருகின்றன. இதனாலேயே போர்கருவிகள் தயாரித்து வியாபாரமாகி போர்கள் நடத்தப்படுவதற்குச் சூழ்நிலைகளை எப்போதும் உருவாக்கி சில இடங்களில் அடிக்கடி சண்டைகள் நடந்து வருகின்றன. உலகம் முழுவதும் அமைதியாக்கப்பட்டுவிட்டால் பின்னர் போர்க்கருவிகளை விற்பனைச் செய்ய முடியாமல் தன் நாட்டு மக்கள் கோலாகல உல்லாச வாழ்க்கை வாழ முடியாமல் போய்விடும் என்ற கவலை அவர்களுக்கு.